


ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதியில் தி.மு.கழக இளைஞர் அணி அறக்கட்டளைக்குச் சொந்தமான இடத்தில் புதிதாக அமைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முழுத் திருவுருவ வெண்கலச் சிலை, கலைஞர் நூலகம், மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி கழக அலுவலகம் மற்றும் இளைஞர் அணி அலுவலகம் "அன்பகம் உதயம்" ஆகியவற்றின் திறப்பு விழா ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான சு.முத்துசாமி வரவேற்புரையில் கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். விழாவின் முடிவில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் நன்றியுரையாற்றினார். நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நாமக்கல் மேற்கு மாவட்டம் மோகனூர் ஒன்றியம் செங்கப்பள்ளியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் போது, மோகனூர் மேற்கு ஒன்றியத்தில் ஆர்.வி.ஆர்.செந்தில்குமார் தலைமையில் அதிமுக மற்றும் அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தில் இருந்து 400 க்கும் மேற்பட்டோர் அக்கட்சிகளிலிருந்து விலகி திமுக துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை கழகக் குழுத் தலைவருமான திருச்சி சிவா, நாமக்கல் மேற்கு மாவட்ட பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் திராவிட முன்னேற்ற கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாநில மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, பேரூர், நகர மற்றும் கிளை கழக நிர்வாகிகள், இளைஞரணி, மகளிரணி, மாணவரணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்,

## பெரம்பலூர் மாவட்டத்தில்

# சமூக நீதிக் காவலர் வே.ஆனைமுத்து நூற்றாண்டு விழா!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்று – புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்து – நூற்றாண்டு விழா மலரை வெளியிட்டார்!

சென்னை, மார்ச் 14 –

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.3.2026) பெரம்பலூர் மாவட்டத்தில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் நடைபெற்ற சமூக நீதிக்காவலர் வே. ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி அமைக்கப்பட்ட வே.ஆனைமுத்து அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் புகைப்படக் கண்காட்சியினை திறந்து வைத்து பார்வையிட்டார்.**

தொடர்ந்து சமூக நீதிக்காவலர் வே.ஆனைமுத்து அவர்களின் நூற்றாண்டு விழா மலரினை வெளியிட்டு, பெரம்பலூர் மாவட்டத்தில் 34.03 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 411 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 44.67 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 315 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த 4,182 பயனாளிகளுக்கு 102.40 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும், அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த 5,945 பயனாளிகளுக்கு 177.87 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

### உடனடி நடவடிக்கை

இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் அவர்களிடம் அளித்த கோரிக்கை மனுக்களின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலி கருவிகளையும், ஒரு இசைக்கலைஞருக்கு 43,000 ரூபாய் மதிப்பிலான இசைக்கருவிகளை வாங்குவதற்கான ஆணையையும் வழங்கினார்.

### பெரம்பலூர் மாவட்ட நலத்திட்ட உதவிகள்

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் மூலம் நம்ம ஊர் நம்ம அரசு திட்டம் மற்றும் மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், ஊராட்சிகளின் பொது நிதியின் மூலம் கட்டப்பட்டுள்ள கீழக்கணவாய் பேருந்து நிறுத்தம், சிறுவாச்சூர் பையா தடுப்பணை, வயலப்பாடி மற்றும் புதுவேட்டக்குடி ஊராட்சி மன்ற கட்டடங்கள் என 26.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 405 திட்டப்பணிகள், பொதுப்பணித்துறையின் மூலம் அம்மாபாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 15.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள யோகா மற்றும் இயற்கை மருத்துவ கட்டடம், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் பெரம்பலூர், வேப்பந்தட்டை, வேப்பூர் மற்றும் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 62.53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள விழுதுகள் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையங்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மூலம் 6.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் லெப்பைக்குடிக்காடு பேரூராட்சியில் மேற்கொள்ளப்பட்டுள்ள குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள், 49.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பூலாம்பாடி பேரூராட்சி அலுவலக கட்டடம், என கூடுதல் மொத்தம் 34.03 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிவுற்ற 411 திட்டப்பணிகளை துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் மூலம் வேப்பந்தட்டையில் 60.00 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சிறு விளையாட்டு அரங்கம் மேம்படுத்தும் பணி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் மூலம் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றியம் உடும்பியம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியம் சில்லக்குடி, பிலிமிசை, ஆதனூர், இரசுலாபுரம், இலந்தங்குழி மற்றும் கூடலூர் ஆகிய பகுதிகளில் 4.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 8 சாலை மேம்பாட்டுப் பணிகள், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் 2.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கொளக்காநத்தம் மற்றும் அய்யனாபுரம் இடையே உயர்மட்ட பாலம் கட்டும் பணி, நபார்டு திட்டத்தின் மூலம் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் 15.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 20 சாலைகள் அமைக்கும் பணிகள்,

அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம், மாவட்ட ஊராட்சி பொது நிதி, ஊராட்சி ஒன்றிய பொதுநிதி, கிராம ஊராட்சி பொது நிதி, நகர்புற ஊராட்சி மேம்பாட்டு நிதி, சிறுகனிமங்கள் மற்றும் குவாரிகள் நிதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட உள்ள பணிகள் என கூடுதல் மொத்தம் 44.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 315 புதிய திட்டப் பணிகளுக்குதுணைமுதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

மேலும் பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த 4,182 பயனாளிகளுக்கு 102.40 கோடி ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகளுக்கு வழங்கிய நலத்திட்ட உதவிகள் விவரம்

இந்நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் இலவச வீட்டு மனைப்பட்டாக்கள், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, இயற்கை மரணம் நிவாரணத் தொகை, விபத்து நிவாரணத் தொகை காசோலைகள் என 146 பயனாளிகளுக்கு 3.24 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,

ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் சார்பில் 3,009 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லம், 124 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமானத் திட்டம் உள்பட மொத்தம் 3,772 பயனாளிகளுக்கு 144.95 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளையும்,

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வதார இயக்கம் சார்பில் 408 பயனாளிகளுக்கு வங்கிக்கடன் இணைப்பு உள்பட 13.85 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,

கூட்டுறவுத் துறையின் சார்பில் 578 பயனாளிகளுக்கு கல்வி கடன், கால்நடை பராமரிப்பு கடன், மகளிர் சுய உதவிக்குழு கடனுதவி என 9.69 கோடி ரூபாய்க்கான கடனுதவி காசோலைகளையும்,

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு தலா 26,760 ரூபாய் மதிப்பிலான தையல் இயந்திரங்களையும், தாட்கோ திட்டத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு மானியத்துடன் கூடிய 18.34 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சரக்கு வாகனங்களையும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 68 பயனாளிகளுக்கு சிறுபான்மையினருக்கான தொழில் மேம்பாட்டு நிதியுதவி, இலவச தையல் இயந்திரம், LPG தேய்ப்பு பெட்டி, பித்தளை தேய்ப்பு பெட்டி என 9.65 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனத்துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு தையல் தொழிலகம், வாடகை கார், துணிக்கடை ஆகிய தொழில்களுக்காக 25.00 இலட்சம் ரூபாய்க்கான மானியத்துடன் கூடிய கடனுதவிகளையும்,

வேளாண் பொறியியல் துறையின் சார்பில் 20 பயனாளிகளுக்கு வேளாண் இயந்திரமாக்கல் பணிகளுக்காக 1.06 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், தோட்டக்கலைத் துறையின் சார்பில் 3 பயனாளிகளுக்கு 6.90 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,

தொழிலாளர் நலத்துறையின் சார்பில் 150 பயனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, இயற்கை மரணம் உதவித்தொகை, ஓய்வூதியம் என 16.61 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,

கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் 10 பயனாளிகளுக்கு சிறிய அளவிலான நாட்டுக்கோழிப் பண்ணை நிறுவ 50 % மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 15.14 இலட்சம் மானிய உதவிகளையும், உணவுப் பொருள் வழங்கல் துறை சார்பில் 50 பயனாளிகளுக்கு புதிய மின்னணு குடும்ப அட்டைகளையும்,

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் 43 மாற்றுத்திறனாளிகளுக்கு ஊன்றுகோல், பல்வேறு திருமண திட்டங்களின் கீழ் நிதியுதவி, காதொலி கருவி, கார்னர் சீட், சக்கர நாற்காலி, திறன் பேசிகள் என 12.56 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும்,

பால் வளத்துறை சார்பில் 116 பயனாளிகளுக்கு சிறிய அளவிலான பால் பண்ணை அமைத்திட 4 % வட்டி மானியத்துடன் 3.13 கோடி ரூபாய்க்கான கடனுதவி காசோலைகளையும்,

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சார்பில் முதலமைச்சரின் பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் 150 பயனாளிகளுக்கு 9.20 இலட்சம் ரூபாய்கான நலத்திட்ட உதவிகளையும்,

மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் 422 பயனாளிகளுக்கு 82.84 இலட்சம் ரூபாய்க்கான நலத்திட்ட உதவிகள் என அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த மொத்தம் 5,945 பயனாளிகளுக்கு 177.88 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.



புதுச்சத்திரம் தெற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.ஜெயபிரகாஷ் ஏற்பாட்டில், புதுச்சத்திரம் மேற்கு ஒன்றிய பா.ம.க. தலைவர் தன்ராஜ், பா.ம.க. ஒன்றிய அமைப்பு செயலாளர் தட்சிணாமூர்த்தி, ஒன்றிய தே.மு.தி.க. துணை செயலாளர் எம்.பழனிவேல் ஆகியோர் தலைமையில் 50 க்கும் மேற்பட்டோர் அக்கட்சிகளில் இருந்து விலகி மற்றும் மாவட்டக் கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதி நேதாஜி, BLA 2 கார்த்தி, கிளை செயலாளர்கள் சக்திவேல், இரத்தினகுமார், ஊராட்சி பொறுப்பாளர் வி.செந்தில் குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கிருஷ்ணகிரி சுங்கசாவடி அருகே நடைபெறவுள்ள , அரசு நிகழ்ச்சியில் புதிய திட்ட பணிகள், முடிவுற்ற பணிகள் துவக்கி வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது இதற்கான முன்னேற்பாடு பணிகள், பந்தல் அமைக்கும் பணிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் கவிதா, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன், மாவட்ட துணை செயலாளர் கோவிந்தசாமி,பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திரசேகர் , கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம் வேல்மணி உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர்!



**12.03.2026 நிகழ்வுகள்**

## கழக மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகள்!

### 1. மீனவர்கள் கைது விவகாரத்தில் மெத்தனமாக இருக்கும் ஒன்றிய அரசு!

**திருச்சி சிவா**



கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு நாடுகளில் ஆண்டு வாரியாகவும் நாடு வாரியாகவும் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களின் எண்ணிக்கை, மீனவர்கள் கைது செய்யப்பட்ட விவகாரம் குறித்து விவாதிக்க இந்திய மற்றும் இலங்கை பிரதிநிதிகளுக்கு இடையே மீன்வளத்திற்கான கூட்டுப் பணிக்குழு நடத்திய கூட்டங்களின் விவரங்கள் மற்றும் மீனவர்கள் பாதுகாப்பாக நாட்டிற்கு அழைத்து வரப்படுவதை உறுதி செய்ய அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? என்று திமுக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா மாநிலங்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

### 2. கச்சா எண்ணெய் உற்பத்திக்கு ஒன்றிய அரசின் திட்டங்கள் என்ன?

**டாக்டர் கலாநிதி வீராசாமி**



சுமார் பதினைந்து பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள எண்ணெய் வளங்களை இறக்குமதி செய்வதற்கு அல்லது மேம்படுத்துவதற்கு புர்கினா பாசோவுடன் இந்தியா ஏற்படுத்தியிருக்கும் ஒப்பந்தம் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக அரசுகளுக்கிடையே முடிவான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) குறித்த விவரங்கள் என்ன? அந்த ஒப்பந்தத்தின் பொருளாதார நம்பகத்தன்மை, புவிசார் அரசியல் தாக்கங்கள் மற்றும் எரிசக்தி பாதுகாப்புகளை அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா? இந்தியாவின் கச்சா எண்ணெய் ஆதாரத்தை பன்முகப்படுத்தவும் நீண்டகால எரிசக்தி விநியோகங்களைப் பாதுகாக்கவும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? எனும் பல்வேறு கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

### 3. ஈரோட்டில் தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை மேம்படுத்த நடவடிக்கை என்ன?

**அந்தியூர் பி. செல்வராசு**



சத்தியமங்கலம், தாளவாடி மற்றும் ஹாசனூர் வழித்தடங்கள் உட்பட தமிழ்நாட்டின் ஈரோடு மாவட்டத்தில் மொபைல் நெட்வொர்க் திறன் குறித்து அரசாங்கம் மதிப்பிட்டுள்ளதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் பி செல்வராசு கேள்வி எழுப்பியுள்ளார். அதேபோல் ஈரோடு மாவட்டத்தில் அரசு கோபுர விரிவாக்கம், ஃபைபர் பேக்ஹால் வலுப்படுத்துதல், கவரேஜ் தணிக்கைகள், டிரைவ் சோதனைகள், சேவை குறைபாடு மற்றும் புகார் தீர்வுக்கான அபராதங்கள் போன்றவை குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்ன? நம்பகமான மொபைல் கவரேஜ், மின்தடைகளின் போது விரைவான மறுசீரமைப்பு மற்றும் குறிப்பிட்ட மாவட்டத்தில் சேவை தரங்களை அமல்படுத்துவதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் என்ன? எனவும் அவர் கேட்டுள்ளார்.

### 4. கிராமப்புறங்களில் எப்போது கிடைக்கும் 5G மொபைல் சேவைகள்?

**எஸ்.ஆர்.சிவலிங்கம்**



2025 ஆம் ஆண்டு இறுதிக்குள் ஐந்தாம் தலைமுறை மொபைல் சேவைகளை நாடு தழுவிய அளவில் அறிமுகப்படுத்தும் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார். தொலைபேசி மற்றும் பிராட்பேண்ட் சேவைகளை கிராமப்புறங்களிலும் விரிவாக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன? நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அதிவேக நெட்வொர்க் பரப்பளவை உறுதி செய்வதற்காக அரசாங்கமும் தொலைத்தொடர்பு நிறுவனங்களும் நிறுவிய 5G அடிப்படை நிலையங்களின் எண்ணிக்கை?குறித்த விவரங்களையும் அவர் கேட்டுள்ளார்.

### 5. உயர்தர கனிமங்களுக்கான சந்தையை இந்தியா மேம்படுத்துகிறதா?

**ஆர். கிரிராஜன்**



முக்கியமான கனிமங்களுக்கான விநியோகச் சங்கிலிகளை வலுப்படுத்துதல் மற்றும் பன்முகப்படுத்துதல் குறித்து விவாதிக்க வாஷிங்டனில் நடைபெற்ற முக்கியமான கனிமங்கள் அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா பங்கேற்றதா என திமுக மாநிலங்களவை உறுப்பினர் ஆர். கிரிராஜன் கேள்வி எழுப்பியுள்ளார். அரிய மண் கனிம விநியோகச் சங்கிலிகளை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், சுத்திகரிப்பு மற்றும் செயலாக்க தொழில்நுட்பங்கள், உயர்தர கனிமங்களுக்கான நீண்டகால சந்தை மற்றும் விநியோகங்களைப் பாதுகாப்பதற்கான நிலையான முறைகள் குறித்தும் புதிய திட்டங்களுக்கு போதுமான நிதியைப் பெறுவதற்கு, கழிவுகளிலிருந்து கனிமங்களை மறுசுழற்சி செய்வதற்கு, தொழில்நுட்பப் பகிர்வு மற்றும் கூட்டு ஆராய்ச்சி முயற்சிகளுக்கு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள்? குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

### 6. விமான பணியாளர் பற்றாக்குறையால் ஏற்படும் பாதுகாப்பு குறைபாடுகளை களைவது எப்போது?

**ஈரோடு கே.இ.பிரகாஷ்**



சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தில் (DGCA) காலியாக உள்ள 50% அதிகமான பணியிடங்களை நிரப்பாமல் இருப்பது விமான போக்குவரத்து துறையில் விபத்துகளுக்கு வழிவகுக்கும் என போக்குவரத்து, சுற்றுலா மற்றும் பண்பாட்டிற்கான நாடாளுமன்ற நிலைக்குழுவால் வெளியிடப்பட்ட வெளிப்படையான எச்சரிக்கையை ஒன்றிய அரசு ஏன் பரிசீலிக்கவில்லை என திமுக ஈரோடு மக்களவை உறுப்பினர் பிரகாஷ் கேள்வி எழுப்பியுள்ளார். பயனுள்ள பாதுகாப்பு ஒழுங்குமுறைக்கு அவசியமானது என்று குழுவால் அறிவிக்கப்பட்ட DGCA-வில் உள்ள அனைத்து முக்கியமான பதவிகளும் எந்த நிரப்பப்படும் காலக்கெடு என்ன? என்றும் அவர் கேட்டுள்ளார்.

### 7. மேகதாது அணையை தடுக்குமா காவிரி மேலாண்மை ஆணையம்?

**தேனி தங்க தமிழ்செல்வன்**

**கோவை கணபதி ராஜ்குமார்**




காவிரி நீர் மேலாண்மை ஆணையம் ஜனவரி 6, 2026 அன்று டெல்லியில் 47வது முறையாக நடத்திய கூட்டத்தில் விவாதிக்கப்பட்டவை குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் தங்க தமிழ் செல்வன் மற்றும் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்கள். காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணை கட்டுவது குறித்து கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்தும் அறிக்கை வெளியிடுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

### 8. போதுமான சமையல் எரிவாயுவை மக்களுக்கு வழங்குகிறதா ஒன்றிய அரசு?

**தருமபுரி ஆ. மணி**



கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் மொத்த சமையல் எரிவாயு விநியோகஸ்தர்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட வாரியாக உரிமம் பெற்ற விநியோக நிறுவனங்களின் எண்ணிக்கைகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார். தர்மபுரியில் முழுமையான சமையல் எரிவாயு சேவை செய்யப்படாத பகுதிகளாக அடையாளம் காணப்பட்ட பகுதிகள் மற்றும் அதை களைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது குறித்தும் அவர் கேட்டுள்ளார்.

### 9. முத்ரா கடன்கள் பெறுவதை எளிதாக்குக!

**ஆரணி தரணிவேந்தன்**



பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) திட்டத்தின் கீழ் கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்ட மொத்த கடன்களின் எண்ணிக்கை குறித்து திமுக எம்.பி. தரணிவேந்தன் கேள்வி எழுப்பியுள்ளார். PMMY கடன்களால் அதிகம் பயனடைந்த துறைகளின் விவரங்கள், இதில் கைவினைஞர் பிரிவுகள், சிறு வணிகர்கள் மற்றும் தமிழ்நாட்டில் சேவை வழங்குநர்கள் எண்ணிக்கை? பெண் தொழில்முனைவோர் மற்றும் பின்தங்கிய பிரிவினருக்கான கடன் எளிதாக கிடைக்கச் செய்வதை அதிகரிக்க ஏதேனும் குறிப்பிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? ஸ்டாண்ட்-அப் இந்தியா, முத்ரா பிளஸ் திட்டங்கள் மற்றும் மாநில MSME ஆதரவு திட்டங்கள் போன்ற பிற திட்டங்களுடன் PMMY ஐ ஒருங்கிணைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் என்ன? தகுதியான பயனாளிகளுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டில், கவரேஜை விரிவுபடுத்துதல், நடைமுறைகளை எளிதாக்குதல் மற்றும் கடன் வரம்புகளை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் திட்டங்கள் என்ன? எனவும் அவர் கேட்டுள்ளார்.

### 10. குலசேகரப்பட்டினத்தில் விண்வெளித் திட்டப்பணிகளின் தற்போதைய செயல்பாடுகள் மற்றும் இலக்கு என்ன?

**ராஜாத்தி சல்மா**



குலசேகரப்பட்டினத்தில் விண்வெளித் திட்டப்பணிக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் உண்மையான செலவின விவரங்கள், டிசம்பர், 2026க்குள் முதல் ராக்கெட் ஏவுதலுக்கான திட்டங்கள், இரண்டாவது விண்வெளித் திட்டப்பணியின் மேலாண்மை மற்றும் செயல்பாடுகளில் பாலின சமத்துவத்துடன் தலைமை பொறுப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் வசதி முழுமையாக இயக்கப்பட்டவுடன் வருடாந்திர ஏவுதலின் எண்ணிக்கை என்ன என்பது குறித்து திமுக மாநிலங்களவை உறுப்பினர் ராஜாத்தி சல்மா கேள்வி எழுப்பியுள்ளார்.